REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 14　செய்தி: 021 493 0000　விளம்பரம்: 021 493 1111

சுடர் :35　கதிர் :130　பங்குனி 22ஆம் நாள்　சனிக்கிழமை 04 ஏப்ரல் 2020 வள்ளுவ...

## அவிகனுக்கு அங்கீகாரம் இல்லை

கொழும்பு, ஏப். 4
ஜப்பானிலிருந்து அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள 'அவிகன்' என்ற மருந்தை இல

12




# அரியாலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவருக்குக் கொரோனா

## யாழ்ப்பாணத்தில் நோயாளர் எண்ணிக்கை 7ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4
சுவிஸ் மதபோதகர் அரியாலையில் தங்கியிருந்த வீட்டின் அருகில் வசித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. 36 வயதான தாய், அவரது 20 வயதான மூத்த மகன் மற்றும் 15 வயதான மூத்த மகள் ஆகியோருக்கே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

02

## தலைநகர் தலைவலி

கொழும்பு, ஏப். 4
கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் கொரோனா வைரஸ் தொற்றும் அபாயம் அதிகமுள்ள மாவட்டங்களாகத் தொடர்ந்து அடையாளப் படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்றிரவு அறிவித்தார்.
கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 36 நோயாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தபடியாக புத்தளம் மாவட்டத்தில் 25 பேரும்,

02

## கொரோனா பலி 57,000

வுகான், ஏப். 4
கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 57 ஆயிரமாக அதிகரித்தது.
சீனாவின் வுகானில் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது சுமார் 200க்கும் அதிகமான நாடுகளில் பரவியுள்ளது.

02



*முச்சந்தி முரளி*

" இதென்ன கோதாரி கிரிக்கெட் ஸ்கோரை விட கொரோனா ஸ்கோர் ஏறிக்கொண்டே போகுதே, எப்பதான் இதுக்கு முடிவோ?"

## கொரோனா 159

கொழும்பு, ஏப். 4
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மேலும் 7 பேர் நேற்று இனங்காணப்பட்டுள்ளார். இதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 159 ஆக அதிகரித்துள்ளது.
சுகாதார அமைச்சு நேற்று இரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12

## தாவடியில் 18 பேருக்கு பரிசோதனை

யாழ்ப்பாணம், ஏப்.4
தாவடியில் தனிமைப்படுத்தலில் இருப்பவர்களிடம், கொரோனா பரிசோதனைக்கான இரத்த மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டன.
தாவடியில் கொரோனா தொற்றுக்கு இலக்கானவருடன் பழகியவர்கள் என்ற சந்தேகத்தில் 18 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு

12

## தாவடிக்கு தடை!

யாழ்ப்பாணத்தில், ஏப்.4
யாழ்ப்பாணம், தாவடி பகுதிக்குள் உள்நுழைவதும், வெளிச்செல்வதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தரப்பினர் நேற்று முன்தினம் இரவிரவாக ஒலிபெருக்கியில் அறிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் முதலாவது கொரோனா தொற்றுள்ள நபர் தாவடிப் பகுதியைச்

12

## கைது 11,000

கொழும்பு, ஏப். 4
பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 11 ஆயிரத்து 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 727 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.
கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணியிலிருந்து நேற்று நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியினுள்ளே இந்தக் கைது

12

## மகிந்தவின் உளறலும் உதயனின் விளக்கமும்



கொழும்பு, ஏப். 4
ஊடக விளம்பரத்தின் அடிப்படையில் ஆராதனைக் கூட்டத்துக்குச் சென்றவர்களால்தான் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவியது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் கூட்டத்தில், கையில் பத்திரிகை விளம்பரத்தை வைத்திருந்தவாறு தெரிவித்ததாவது:
"நான் நினைக்கின்றேன், நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்படவேண்டும். ஏனெனில் இந்த விளம்பரம் எனது கைகளுக்கு கிடைத்தது. கொரோனா உங்களை நெருங்காது என்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகையொன்றில்

02

## சமயங்கள் மீது விமர்சனம் தயவு செய்து தவிருங்கள்

### ஆறு.திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.4
சமயங்களை விமர்சிப்பதைத் தவிருங்கள். சைவக் கோவில்களை சிலர் திட்டமிட்டு விமர்சித்து வருகிறார்கள். இது மிகவும் மன வருத்தத்துக்குரியது. என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமான கலாநிதி. ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும்

12



செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க...

செய்தி
077 316 5555
076 584 2222
021 493 0000

விளம்பரம்
071 618 2182
077 959 2628
021 493 1111

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதிக்கே அதிகாரம்!

கொழும்பு, ஏப். 4

தேர்தலை நடத்துவது தொடர்பாக உயர் நீதிமன்றின் கருத்தை அறிய வேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்ற சட்டத்துக்கு அமைய தேர்தலை நடத்த வேறு ஒரு திகதியை அறிவிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மீண்டும் தேர்தலை நடத்தும் தினத்தை தீர்மானிப்பது மாத்திரமல்ல, தேர்தல் நடைபெற்று மூன்று மாதங்களுக்கு அரசநிதிச் செலவுகள் தொடர்பான அதிகாரமும் ஜனாதிபதிக்கே உள்ளது.

தேர்தலை நடத்துவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டறிய வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தது. இந்தக் கடிதம் தொடர்பில் ஆளும் கட்சியின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடும் போதே கம்மன்பில இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 2 ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த ஜனாதிபதி மார்ச் 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வேட்புமனுக்களைப் பெற்றுக்கொண்டு, ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார். எனினும், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அடுத்து தேர்தலை ஒத்தி வைக்க தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது.

தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம் காலத்துக்கு ஏற்றது. அதேபோல் உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறியுமாறு ஜனாதிபதியிடம் தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது.

உயர் நீதிமன்றத்திடம் கருத்தை கேட்குமளவுக்கு சட்டச் சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் 70 ஆம் சரத்துக்கு அமைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறுமாயின் அப்போது அரசமைப்புச்சட்டம் தொடர்பான பிரச்சினை ஏற்படும். செய்ய முடியாததை செய்யுமாறு உத்தரவிட முடியாது. செயற்பாட்டு ரீதியாக செய்ய முடியாது என்றால், அங்கு சட்டத்தை மீறியதாகக் கருதப்பட மாட்டாது என்றும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (த)

## மகிந்தவின்...

விளம்பரப்படுத்தப்பட்டு கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம் 14, சுதுமலை வீதி மானிப்பாயில் கூடுமாறு இதன்மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இங்குதான் கொரோனா வைரஸ்..........(சொல்ல வந்துவிட்டு பிறகு இழுக்கிறார்)

ஆராதனைக்கு வருமாறுதான் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம்தான் யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலை (கொரோனா) ஏற்பட்டுள்ளது. பத்திரிகைகளில் இப்படியான விளம்பரங்களை பிரசுரிக்க இடமளிக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு வடக்கிலுள்ள உங்களிடம் (யாரையோ பார்த்து...) கோரிக்கை விடுக்கின்றேன். இதன் உரிமையாளர் யாரென எனக்கு தெரியாது" என்றார் பிரதமர் மஹிந்த.

**ஆசிரியர் குறிப்பு:**

அவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை என்று குறிப்பிட்டது 'உதயனைத்தான்'. பிரதமரின் கையில் இருந்த விளம்பர 'கட்டிங்' உதயன் பத்திரிகையில் மார்ச் மாதம் 15ஆம் திகதி வெளிவந்ததுதான்.

1. இந்த விளம்பரத்தின் அடிப்படையில் கூட்டப்பட்ட கூட்டத்தின் ஊடாகவே யாழ்ப்பாணத்தில் கொரோனா பரவியது என்று நாட்டின் உயர் பதவியான பிரதமர் பதவியில் அமர்ந்திருந்து கொண்டு மஹிந்த ராஜபக்ச கூறுகின்றார். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பது அசெம்பிளி ஒவ் கோட் என்ற சபை. கொரோனா வைரஸ் பரவ காரணமாக அமைந்த அரியாலைக் கூட்டத்தை நடத்திய பிலதெல்பியா சபை. இரண்டும் வேறு வேறானவை. விளம்பரத்தில் ஆராதனை நடக்க இருப்பதாகச் சொல்லப்பட்ட பகுதி இராசாவின் தோட்டம். ஆனால் சுவிஸ் போதகர் ஆராதனை நடத்தியதோ அரியாலை, செம்மணியில். ஆகவே அதுவும் இதுவும் வேறு வேறு என்பது இது சிறு குழந்தைக்கும் புரியும். அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட, அதுவும் இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவி வகித்த மஹிந்தவுக்கு இது தெரியாமல் புரியாமல் விளங்காமல் போனது அதிசயத்திலும் அதிசயமே.

2. பத்திரிகையில் விளம்பரத்தை பிரசுரிப்பதற்கு குறித்த சபையினர் கையளித்தபோது, 'அனுமதி இலவசம்' எனக் குறிப்பிட்டு மக்களுக்கு அழைப்பு விடுப்பது குறித்து சபையினருக்குச் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, மதபோதகர்கள் மட்டுமே ஆராதனையை நடத்துவார்கள் எனவும், தமது கூட்டத்துக்கு மக்கள் கூடமாட்டார்கள் என்றும் உறுதிமொழி குறித்த சபையினரால் வழங்கப்பட்டது. அந்த அடிப்படையிலேயே விளம்பரம் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. எனினும் பின்னர் அந்தச் சபையின் ஆராதனை யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சனின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, பொலிஸார், சுகாதார அதிகாரிகள், பிரதேச செயலர் இணைந்து மேற்படி நிகழ்வைத் தடுத்து நிறுத்தினர். இது தொடர்பான செய்தியும் மார்ச் மாதம் 17ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரமானது.

4. உதயன் பத்திரிகையில் அந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டமையால் தான் அதனை அதிகாரிகள் உதயன்மூலம் அறிந்து அது தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கொரோனா பரவக் காரணமாக பிலதெல்பியா தேவாலய ஆராதனை நிகழ்வு எந்தவொரு ஊடகங்களிலும் பிரசுரிக்கப் படவில்லை. அதனால் அதனை எவராலும் தடுக்கவும் முடியவில்லை.

எந்தவொரு விளம்பரங்களும் இல்லாமல் நடத்தப்பட்ட ஆராதனைக் கூட்டத்தாலேயே, யாழ்ப்பாணத்துக்கு கொரோனா வந்து சேர்ந்தது. இது தெரியாமல், நாட்டின் பிரதமர் 'வடிவேலு' தனமாக வாய்க்கு வந்ததையெல்லாம் அடித்து விடுவது அந்தப் பதவிக்கு பொருத்தமற்றது.

5. பெப்ரவரி மாதத்திலிருந்து நாட்டுக்கு வரும் பயணிகள் அனைவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள். அப்படியிருக்கையில் காய்ச்சலுடன் சுவிஸ் போதகர் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக இலங்கைக்கு வந்து, கொரோனா வைரஸ் தாக்கத்துடன் நாட்டை விட்டு விமான நிலையம் ஊடாக வெளியேற அனுமதித்தது யார்? இந்த விடயத்தில் மஹிந்தவின் அரசே யாழ்ப்பாண மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

6. வடக்கில் மூலை முடுக்கெங்கிலும் நடக்கும் எந்த நிகழ்வானாலும் மோப்பம் பிடிக்கும் புலனாய்வுத்துறையினர் இப்படியொரு நிகழ்வு நடந்திருப்பதை அறிந்திருக்கவில்லையா? அந்த நிகழ்வை தலைமை தாங்கி நடத்துபவர் சுவிஸிலிருந்து வந்திருந்தவர் என்ற தகவல் அவர்களுக்கு கிடைக்கவில்லையா? மார்ச் மாதம் ஆரம்பத்திலிருந்து வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வந்தவர்கள் தம்மைப் பதிவு செய்ய வேண்டும் என்ற கட்டாய நிலைமை இருந்தும் அதனைச் செய்யாத மதபோதகரை கைது செய்யாமல் தடுத்தது யார்? அவரைக் கைது செய்திருந்தால், யாழ்ப்பாணத்தில் கொரோனா பரவும் நிலைமை ஏற்பட்டிருக்குமா? அவரைப் பத்திரமாக சுவிஸுக்கு அனுப்பி வைத்தது யார்?

7. அண்மைக் காலமாக உதயனில் வெளியான விளம்பரத்தை அரியாலை சம்பவத்துடன் இணைத்து உதயன் மீது வேண்டுமென்றே திட்டமிட்டு சேறு பூசப்பட்டு வந்தது. இந்த அபாண்டமான சேறு பூசலின் பின்னணியில் இருப்பது யார் இருப்பது என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

8. 35 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசியப் பாதையில் தடம் மாறாது பயணிக்கும் உதயனின் குரல் வளையை நசுக்குவதற்கு சாம, தான, பேத, தண்ட வழிகளையெல்லாம் பேரினவாத அரசும் அதன் புல்லுருவிகளும், ஒட்டுக்குழுவினரும் இன்றளவும் ஏவிக் கொண்டே இருக்கின்றார்கள். ஆனால், அவர்களின் அத்தனை முயற்சிகளும் உதயனை புடம்போட்டு உரமேற்றி தமிழ்த் தேசியக் குரலை இன்னமும் உயர்த்தும் ஓர்மத்தையே தந்துள்ளன. இனியும் தரும்.

9. மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகின்றவர்களுக்கு உதயன் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (ஆ-ர்)

## ஒரு குடும்பத்தை...

அரியாலை பிலதெப்பியா தேவாலயத்தின் அருகிலுள்ள ஒரே வளவினுள் மூன்று வீடுகள் அமைந்துள்ளன. அதில் ஒரு வீட்டில் சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் தங்கியிருந்தார். அருகிலிருந்த வீட்டில் வசித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அந்த வீட்டில் வசித்த 36 வயதான தாயின் தந்தை மற்றும் அவரது இரு மகன்களும் காங்கேசன்துறையிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்திலேயே உள்ளனர். அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலை பிலதெல்பியா தேவாலயத்தில் கடந்த மாதம் 15ஆம் திகதி ஆராதனை இடம்பெற்றது. இதில் பங்கேற்ற சுவிஸ் மதபோதகருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவருடன் தனிமையில் உரையாடிய தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரருக்கும் கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து மதபோதகருடன் நெருக்கமாக பழகிய 20பேர் அடையாளப்படுத்தப்பட்டு காங்கேசன்துறையில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் கடந்த 23ஆம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 10 பேருக்கு ஏப்ரல் முதலாம் திகதி சோதனை நடத்தப்பட்டது. மூவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அரியாலை தேவாலயத்தின் மதபோதகர், சுவிஸ் மதபோதகரின் உறவினர், சுவிஸ் மதபோதகரின் சாரதி ஆகியோருக்கு கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து எஞ்சிய 10 பேருக்கும் நேற்று முன்தினம் சோதனை நடத்தப்பட்டது. சோதனை முடிவுகள் நேற்று இரவு அறிவிக்கப்பட்டன. அவர்களில் மூவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இதுவரை 7 கொரோனா நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். (ஒ,5,105)

## தலைநகர்...

களுத்துறை மாவட்டத்தில் 24 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 11 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேரும், கண்டி மாவட்டத்தில் 4 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 3 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 2 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். காலி, கேகாலை, மட்டக்களப்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களைத் தனிமைப்படுத்தும் நிலையங்களில் 34 பேரும், இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 5 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் கொரோனா வைரஸ் தொற்றும் அபாயம் அதிகமுள்ள மாவட்டங்களாக அரசால் மீண்டும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (ம-22)

## கொரோனா...

இந்த வைரஸால் உலகமே முடங்கிப் போயுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் அதிகப்படியான உயிரிழப்புக்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 6 ஆயிரம் உயிரிழப்புக்கள் பதிவாகின. நேற்று இரவு வரையான நிலவரத்தின்படி உயிரிழப்பு எண்ணிக்கை சுமார் 57 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

# பட்டினிச் சாவு அபாயத்தில் முல்லை. பூதன்வயல் மக்கள்

## நிவாரணம் வழங்க முன்வருமாறு கோரிக்கை

**முல்லைத்தீவு, ஏப்.4**

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பூதன்வயல் கிராம மக்கள், தாம் பட்டினிச் சாவடையும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளதாகவும், தமக்கும் நிவாரணப் பொருள்களைத் தந்துதவு மாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

குறித்த கிராமத்தில் 240 குடும்பங் களுக்கு மேல் வசித்து வருகின்றன. அங்குள்ள பெரும்பாலான குடும் பங்களைச் சேர்ந்தோர் தினக்கூலிக் குச் சென்று அதில் வரும் ஊதி யத்தை வைத்தே தமது அன்றாட வாழ்வாதாரத்தை முன்னெடுத்துள் ளனர்.

இந்த நிலையில் தற்போது கொரோ னாத் தொற்று அபாய நிலை காரண மாக அரசால் ஊரடங்கு நடை முறைப்படுத்தப்பட்டுள்ளதால் அங் குள்ள குடும்பங்களின் வாழ்வாதா ரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பிற இடங்களில் மக்க ளுக்கான நிவாரணங்கள் பலரா லும் வழங்கப்படுகின்றபோதும், இதுவரையில் தமது கிராமத்துக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப் படவில்லை என்று அந்த மக்கள் கவலை தெரிவித்தனர். இவ்வா றான நிலை தொடர்ந்தும் நீடிக்கு மானால் தாம் பட்டினிச்சாவை எதிர் கொள்ளும் அபாய நிலை ஏற்படு மெனவும் கவலை தெரிவித்த அவர் கள் தாம் எதிர்கொண்டுள்ள அபாய நிலையைக் கருத்திற்கொண்டு தமக் கான நிவாரணங்களை வழங்க முன்வருமாறு கோரிக்கை விடுத்த னர். (ப-246)

# முல்லையில் உலருணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஏப்.4

வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதனின் ஞாபகார்த்தமாக "அன்ரனி ஜெயநாதன்" அறக் கட்டளையின் நிதிப் பங்களிப்பில் முல்லைத் தீவில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியினால் அன்ரனி ஜெயநா தன் பீற்றர் இளஞ்செழியன் தலைமையில் இந்த உணவு பொதிகள் வழங்கப்படுகின்றன.

தற்போது தொடர்ந்து நாட்டில் ஊரடங்கு சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளமையால் பல பகுதி களில் அன்றாடம் உழைத்து வாழ்க்கையை போக்கும் 2,3 வயதுகளையுடைய சிறுவர்கள் அடங்கிய குடும்பங்கள், விசேட தேவையுடை யோர் என்போரின் நலன்களைக் கருத்தில் கொண்டு நேற்றும், நேற்று முன்தினமும் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மேற்கு, கொக்குத்தொடு வாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு, செம் மலை, நாயாறு (செம்மலை கிழக்கு), உப்புமா வெளி, அளம்பில் வடக்கு, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, முல்லைத்தீவு தெற்கு, வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, கோவில் குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம் ஆகிய கிரா மங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்க ளுக்கு இந்த உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னதாக பல லட்சம் ரூபா செலவில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான உல ருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பொதிகள் மாவட்ட மேலதிக செயலாளரின் அனுமதியுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், கரை துறைப்பற்று பிரதேச செயலக நிர்வாக உத்தி யோகத்தர், கிராம அலுவலர்களின் ஒத்துழைப் புடன் வழங்கப்பட்டன. (ப)

# பாட்டுப்பாடி மகிழ்விக்கும் பொலிஸார்

கொழும்பு, ஏப். 4

'கொரோனா' வைரஸ் தொற்றுக்கு இலக்கான நபரொருவர் உயிரிழந்ததையடுத்து, மருதா னையில் அவர் வாழ்ந்த பகுதி நேற்று முன்தி னம் முதல் முற்றாக முடக்கப்பட்டுள்ளது. சுமார் 2ஆயிரம் பேர் சுய தனிமைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மாலை பாதுகாப்பு தரப் பினர் அங்கு பாட்டுபாடி மக்களை மகிழ்வித்த னர். மக்களும் வீட்டுக்குள் இருந்தவாறு செவி மடுத்தனர். அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எப்படி தம்மை பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பிலும், தனிமை யின் அவசியத்துவத்தை உணர்த்தியும் விழிப் புணர்வு அறிவிப்புகளும் இரு மொழிகளிலும் விடுக்கப்பட்டன.

*'ஊரு சனம் தூங்கிருச்சு*
*ஊதக் காத்தும் அடிச்சிருச்சு*
*பாவி மனம் தூங்கலையே*
*அதுவும் ஏனோ புரியல்லையே'*

என பாதுகாப்பு தரப்பு பாடிய பாடல் சமூக வலைத் தளங்களில் நேற்று வைரலானது. (ஒ,5,44)

# ஐயனார் கோவிலால் உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப்.4

வறுமைக்குட்பட்ட மக்களுக்கு சுன்னாகம் ஐயனார் கோவிலால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட் டன. 2 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள் களே இவ்வாறு நேற்று வழங்கப்பட்டன.

ஜே /198, ஜே /199, ஜே /212 ஆகிய கிராம அலுவ லர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 150 பயனாளிக ளுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான உலர் உண வுப்பொருள்கள் அவர்களுடைய வீடுகளுக்கே எடுத் துச்சென்று கையளிக்கப்பட்டன.

உடுவில் பொதுச்சுகாதார உத்தியோகத்தரின் வேண் டுகோளுக்கு அமைய தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங் களுக்கான உலர் உணவுப்பொருள்களும் இவ்வாறு வழங்கப்பட்டன. (ப-20)





# பொன்னாலைக் காட்டில் கசிப்புக் குகை முற்றுகை!

## அதிரடிப் பாய்ச்சலில் கோடா, கசிப்பு, உபகரணங்கள் மீட்பு

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நேரத்தில், பொன்னாலை காட்டில் கசிப்புக் காய்ச்சும் இட மொன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை முற்றுகையிடப்பட்டது. பிரதேச இளைஞர்களும் வட் டுக்கோட்டைப் பொலிஸாரும் இணைந்து இந்த முற்றுகை நடவ டிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, கசிப்பு காய்ச்சிய நபர்கள் தப்பியோடிய நிலையில் அவர்களால் காய்ச்சப்பட்ட கசிப்பு, எஞ்சிய கோடா மற்றும் உபகர ணங்கள் கைப்பற்றப்பட்டன.

பொன்னாலைக்கு வெளியே இருந்து வந்தவர்களே இங்கு கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. முற்றுகை யின்போது அவர்கள் தப்பிச் சென்ற போதிலும் பொலிஸார் அவர்களை அடையாளப்படுத்தி யுள்ளனர். மேற்படி பிரதேசத்தில் இயற்கையாக உள்ள தாழ்வான இடத்தில் நீர் தேங்கி நின்றமை யைச் சாதகமாகப் பயன்படுத்திய கசிப்பு உற்பத்தியாளர்கள் அங்கு பல தடவைகள் கசிப்புக் காய்ச்சும் செயற்பாட்டை மேற்கொண்டிருந் தனர் என்று தெரியவந்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறை யில் உள்ளபோதும், நேற்றுக் காலை குறித்த இடத்தில் கசிப்பு காய்ச்சப்படுகின்றது என அறிந்து கொண்ட பிரதேச மக்களும் இளை ஞர்களும் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி னர். இதனையடுத்து காலை 9 மணியளவில் பொலிஸாரும் இளைஞர்களும் இணைந்து குறித்த இடத்தை முற்றுகையிட்ட னர். இதன்போது அங்கு கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த நபர்கள் தங்களை சுதாகரித்துக்கொண்டு சிறு பற்றைகள் வழியாகத் தப்பி யோடினர். பல மணிநேரம் தேடு தல் மேற்கொண்ட போதிலும் அவர்கள் சிக்கவில்லை.

தேடுதல்களின்போது பரல்களில் கோடாவை நிறைத்து பற்றைக்குள் மறைத்து வைத்துவிட்டுப் பல தட வைகள் அங்கு கசிப்பு காய்ச்சிய மைக்கான தடயங்கள் கண்டுபி டிக்கப்பட்டது. மூன்று பரல்களில் கசிப்பு காய்ச்சப்பட்டுக்கொண்டி ருந்தது. மேலதிகமாக வெற்று பரல் களும் அங்கிருந்து மீட்கப்பட்டன.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து பார்வையிட்டார். உரிய விசாரணைகளை மேற் கொண்டு சந்தேகநபர்களை கைது செய்யுமாறு அவர் பொலி ஸாருக்கு உத்தரவிட்டார்.

அங்கு காய்ச்சப்பட்ட கசிப்பு, எஞ் சிய கோடா, கசிப்பு காய்ச்சுவ தற்கு பயன்படுத்தப்பட்ட உபகர ணங்கள் என்பன பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. (ப)

# பாதுகாப்பு இல்லையேல் பணிகள் நிறுத்தப்படும்

## கிராம அலுவலர்கள் போர்க்கொடி

**கொழும்பு, ஏப். 4**
**கொரோனா ஒழிப்புக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை வழங்குமாறு கிராம அலுவலர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கொரோனா ஒழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடும் கிராம அலுவலர்களுக்கு எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் இதுவரை வழங்கப்படவில்லை என இலங்கை ஒன்றிணைந்த கிராம அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் கமல் கீத்சிறி குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மக்கள் மத்தியில் பணியாற்ற வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தங்களின் பாதுகாப்பை உறுதி செய்யாவிடின், எதிர்வரும் வாரம் தொடக்கம் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையிலிருந்து விலகவுள்ளதாகவும் இலங்கை ஒன்றிணைந்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் கமல் கீத்சிறி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சியிடம் வினவியபோது,

"கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் கிராம அலுவலர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறியுள்ளார். (த)

---

# இந்தியாவில் 960 வெளிநாட்டவர் கறுப்புப் பட்டியலில்

## இலங்கையரும் உள்ளடக்கம்

கொழும்பு, ஏப்.4

இலங்கையர்கள், அமெரிக்கர்கள், பிரித்தானியர்கள், சீனர்கள் உள்ளிட்ட தப்லீக் ஜமாத்தைச் சேர்ந்த 960 வெளிநாட்டு உறுப்பினர்களின் சுற்றுலா விசாவை நிறுத்தி, அவர்களை கறுப்புப் பட்டியலில் வைக்க இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

டெல்லி நிஜாமுதீன் பகுதியில் உள்ள தப்லீக் ஜமாத் சர்வதேச அலுவலகத்தில் இந்த மாத தொடக்கத்தில் நடந்த மத வழிபாடு மாநாட்டில் 250 க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் உள்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் நாட்டில் 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பும் இவர்கள் தப்லீக் ஜமாத்தில் தங்கி இருந்ததைக் கண்டு அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.

அப்போது, நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் ஏராளமான கொரோனா நோயாளிகள் அங்கு இருந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதனையடுத்து தப்லீக் ஜமாத் அமைப்பில் உறுப்பினர்களாக இருக்கும் வெளிநாட்டினரின் விஸாவை ரத்து செய்ய இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

"அமெரிக்கர்கள் நால்வர், பிரிட்டனைச் சேர்ந்த 9 பேர், சீனாவைச் சேர்ந்த 6 பேர் உள்ளிட்ட தப்லீக் ஜமாத்தைச் சேர்ந்த 960 வெளிநாட்டு உறுப்பினர்களின் சுற்றுலா விஸாவை நிறுத்தி, அவர்களை கறுப்புப் பட்டியலில் வைத்துள்ளோம். இப்போது இந்த வெளிநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் இருக்கிறார்கள்.

இதில் இந்தோனேசியாவைச் சேர்ந்த 379 பேர், பங்களாதேஷைச் சேர்ந்த 110 பேர் , மியான்மரைச் சேர்ந்த 63 பேர், இலங்கையைச் சேர்ந்த 33 பேர் அடங்குவர். மேலும், குர்கிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 77 பேர், மலேசியாவைச் சேர்ந்த 75 பேர், தாய்லாந்தைச் சேர்ந்த 65 பேர், வியட்நாமைச் சேர்ந்த 12 பேர், சவுதி அரேபியாவைச் சேர்ந்த 9 பேர், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 3 பேர் ஆகியோரின் விஸாக்களும் இடை நிறுத்தப்பட் டுள்ளன" என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ப)

---

# பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.4

சட்டத்துக்கும், மனித உரிமைக்குமான நிறுவனத்தால், கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மற்றும் ஊரடங்குச் சட்டத்தால் முடக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அந்த அமைப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தற்போதுவரை நடைமுறையில் இருந்து வருகிறது. இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் குறிப்பாக தினக் கூலி பெற்று தமது அன்றாட வாழ்வை நடத்திவரும் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்யும் முகமாகவே இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படுகிறது. எமது நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள அரியாலை கிராம மக்களுக்காக 1500 ரூபா பெறுமதியான 100 பொதிகளை யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த 27ஆம் திகதி கையளித்தும் அவர்களுக்கூடாக அரியாலை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/34, ஜே /135, ஜே/136 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய நவாலி, களவோடை கிராமங்களைச் சேர்ந்த இதுவரையில் எவ்வித நிவாரணங்களையும் பெற்றுக்கொள்ளாத 100 குடும்பங்களுக்கு 1500 ரூபா பெறுமதியான நாளாந்த சமையலுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தீவகப் பகுதியும் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட கிராமங்களை இனங்கண்டு அவர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (ப-20)

---

# மன்னாரிலிருந்து 39 பேர் பிணையில்

மன்னார், ஏப். 4

கொரோனா அச்சம் காரணமாக மன்னார் நீதிமன்ற வழக்கிலுள்ள சந்தேகநபர்களில் 35 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலிருந்தும் சிறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள். அதன்படி மேற்குறித்த சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-213)

---

# ஊரடங்கு 'பாஸில்' நேரம் குறிப்பிடவும்

## பிரதேச செயலர்கள் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில் சில தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழங்கப்படும் பாஸ்களில் தொழிலுக்குப் புறம்படும் நேரம் மீண்டும் வரும் நேரம் சரியாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்று பிரதேச செயலர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடற்றொழில், விவசாயம், பேக்கரி உற்பத்தி விற்பனை, அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம், மருந்து விநியோகம், சீவல் தொழிலுக்குச் செல்லல் என்பனவற்றுக்கு பிரதேச செயலகம் ஊடாக பாஸ் வழங்கப்பட்டு வருகிறது.

இதில் தொழில் நிமித்தம் புறப்படும் நேரம், மீண்டும் திரும்பும்நேரம் என்பன பாஸில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். குறித்த நேரம் தாமதித்து திரும்பும்போது பாதுகாப்புத் தரப்பினரின் கடுமையான கெடுபிடிக்குள் சிக்கும் நிலை உருவாகும். இது போன்ற முறைப்பாடுகள், சிக்கல் நிலைகள் பிரதேச செயலர்களுக்கு கிடைத்த வண்ணமுள்ளன. ஆகவே சரியான ஆவணங்களைச் சமர்ப்பித்து பாஸைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அது போன்று தொழிலுக்குப் புறப்பட்டு மீண்டும் திரும்பும் நேரங்களைச் சரியாகக் குறிப்பிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

---





முல்லைத்தீவு மாவட்ட பழம்பாசி கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் கல்வியங்காடு நல்லூர் நண்பர்கள் ஐக்கியராச்சியம் இளையோர்களின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-222)

# சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் இலங்கை

## மன்னிப்புச் சபை வேண்டுகோள்

**கொழும்பு, ஏப். 4**

**சிறுபான்மையினர் தங்கள் சொந்த மரபுகளுக்கு ஏற்ப உறவினர்களின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு உள்ள உரிமையை இலங்கை அதிகாரிகள் மதிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இலங்கை அரசு கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை எரியூட்டி வருகின்றது. இது இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றுவோரின் நம்பிக்கைக்கும் மரபுக்கும் முரணாக உள்ளதால் இந்த விவகாரம் பேசுபொருளாக மாறியுள்ளது. இதையடுத்து இந்த விடயம் தொடர்பில், சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவுக்கான இயக்குநர் பிராஜ் பட்நாயக் தெரிவித்ததாவது:

கொவிட் 19 காரணமாக துயரத்தில் உள்ள உறவினர்கள் தாங்கள் விரும்பும் விதத்தில் தங்கள் குடும்பத்தவர்களுக்கு இறுதி மரியாதையைச் செலுத்தவேண்டும். சர்வதேச வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப இது சாத்தியமாக உள்ள பட்சத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் மார்ச் 27ஆம் திகதி வெளியிட்ட அறிவுறுத்தல்கள் இறந்தவர்களின் உடல்களைப் பாதுகாப்பாகக் கையாள்வது குறித்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களை அடிப்படையானவையாகக் கொண்டவை. அதில் இறந்தவர்களின் உடல்களை புதைப்பது அல்லது தகனம் செய்வது குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனினும் மார்ச் 31ஆம் திகதி கொரோனா வைரசினால் உயிரிழப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்யும் விதத்தில் இலங்கை அரசாங்கம் தனது கொள்கையை மாற்றியமைத்தது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களில் இருந்து விலகியமைக்கான காரணத்தை இலங்கை அரசாங்கம் இன்னமும் வெளியிடவில்லை. இதன் காரணமாக இந்த நடைமுறைகள் பொதுச் சுகாதாரத்தை பாதுகாப்பதற்கு அவசியமற்றவை என்ற கரிசனை எழுந்துள்ளது - என்றார். (ம)

# இலங்கை ரூபா மேலும் வீழ்ச்சி

கொழும்பு,ஏப்.4

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் நேற்றைய விற்பனைப் பெறுமதி 193.75 ரூபாவாகப் பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் உலகம் முழுவதும் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-114)

# மருந்துகளை இங்கே பெறலாம்

தெல்லிப்பழை,ஏப்.4

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நேரத்தில், தெல்லிப்பழைப் பிரதேச மக்கள் மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்யக்கூடிய விற்பனை நிலையத்தை பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

தேவையுடையோர் மருந்துப் பொருள்களை தெல்லிப்பழை ஆராதனா பார்மசியுடன் 0771138496 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# 64 சந்தேகநபர்களுக்கு முல்லை மன்று பிணை

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குள்ள 64 சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பல சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த 16ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வரையான காலத்தில் நீதிச்சேவைகள் ஆணைக் குழுவின் அறிவித்தலின் பிரகாரம் இதுவரை 64 பேரை பிணையில் விடுவித்துள்ளோம் என்று முல்லைத்தீவு நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்களே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பதிவாளர் மேலும் தெரிவித்தார். (து-19)



# யாழ்.இந்துக் கல்லூரியின் நிவாரணப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகத்தால் நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 120 மாணவர்களுக்கான உலர் உணவுப்பொதிகள், கல்லூரி ஆசிரியர்கள், பிரித்தானிய வாழ் மற்றும் கொழும்பு வாழ் பழைய மாணவர் இருவர் (89ம் ஆண்டு உயர்தரம்), அயற் பாடசாலை இரசாயனவியல் ஆசிரியை ஆகியோரின் பங்களிப்பில் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற் கட்டமாக 50 மாணவர்களுக்கான பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் குடும்பங்கள், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால், பாதிக்கப்பட்டுள்ளன என்று அறிய முடிகிறது.

அதனால் வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்வந்துள்ளது.

அதனால் உதவி தேவைப்படும் நிலையில் உள்ள மாணவர்களின் குடும்ப விவரங்கள் கல்லூரி அதிபரால் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# 9 நாடுகளில் இன்னும் கொரோனா இல்லை

கொழும்பு,ஏப்.4

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் சம்பந்தப்பட்ட 193 நாடுகளில் 19 நாடுகளுக்குள் இதுவரை கொரோனா வைரஸ் பரவவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கொமரூஸ், கிரிபதி, லெசதோ, மலாவி, மாஷல் தீவு, மைக்ரோசியா, நாவுரு, வடகொரியா, பலாவு, சேமோவா, வனவாடு, யேமன், சாஹோ தோமே, பிரின்சிபே, சொலமன் தீவுகள், தென் சூடான், தஜிகிஸ்தான், டொங்கா, தர்கிமேனிஸ்தான், துவாலு போன்ற நாடுகளில் நேற்று வரை கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரங்களை பயன்படுத்தி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (க)

# மாற்றுவலுவுள்ளோருக்கும் உதவக தேனீ அமைப்பினர் கோரிக்கை

கொரோனா அச்சுறுத்தலால் மாற்றுவலுவுடையோரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், நிவாரணப் பொதிகளை தங்களுக்கும் தந்துதவுமாறும், மன்னாரில் உள்ள தேனீ மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடரர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாற்றுத்திறனாளிகளும் பெரும் பாதிக்கப்புக்குள்ளாகியுள்ளனர். நாளாந்த வருமானத்துக்கு வேலை செய்து வாழ்க்கை நடத்தி வந்த பல குடும்பங்களுக்கு கொடையாளர்களும் சமூக மட்ட அமைப்புகளும் அவர்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஆனாலும் மாற்றுத்திறனாளிகளுக்கு எவரும் உதவி செய்வதற்கு இது வரை முன்வரவில்லை. இந்த ஊரடங்கின் மூலம் மாற்றுத்திறனாளிகளாக உள்ள குடும்பங்களும் அன்றாட தொழில் வாழ்வாதாரங்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே கொடையாளிகள், சமூக மட்ட அமைப்புகள் இணைந்து ஏனைய மக்களுக்கு உதவிகள் வழங்குவது போன்று மன்னாரில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்றனர். (பு - 213)

# 270 குடும்பங்களுக்கு இரவு உணவு வழங்கல்

யாழ்ப்பாணம்,ஏப். 4

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த 270 குடும்பங்களுக்கான இரவு ஊணவுகளை நல்லூர் தெற்கு சனசமூக இளைஞர்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை வழங்கியுள்ளனர்.

தொடர் ஊரடங்குச் சட்டத்தால், பாதிக்கப்பட்ட அரியாலை கிழக்கு, பூம்புகார் வேளாங்கன்னித்தோட்டம், முதலியார் தோட்டம், நாவலடி , முள்ளி இளையதம்பிவீதி ஆகிய இடங்களில் உள்ள முதியவர்கள், மற்றும் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்கள், வைரஸ் தொற்றுச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் உட்பட 270க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கே இவ்வாறு இரவு உணவுகள் வழங்கப்பட்டன. (பு-23)

# கொழும்பிலிருந்து வரும் லொறிகளுக்கு உயிலங்குளத்திலிருந்து மாற்று சாரதிகள்

## கிருமி நீக்கப்பட்ட பின்னரே மன்னாருக்குள் வர அனுமதி

மன்னார், ஏப். 4

தென் பகுதியிலிருந்து பொருள்களுடன் மன்னாருக்கு வருகின்ற லொறிகளை மன்னார் மதவாச்சி பிரதான வீதி உயிலங்குளம் 9 ஆம் கட்டைப் பகுதியுடன் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



9 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள பாடசாலையில் நிறுத்தி, கிருமிநீக்கம் செய்யப்பட்ட பின்னர், பிறிதொரு சாரதியின் உதவியுடன் குறித்த லொறி மன்னாருக்குக் கொண்டு வரப்பட்டு பொருள்களை வியாபார நிலையங்களுக்கு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அவசர நிலைமைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

அதில், மன்னார் சுகாதாரத் துறையினரின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாடு பிரதேச செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இன்று சனிக்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த வர்த்தகர்களும் இதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

எதிர்வரும் இரண்டு வாரங்கள் கொரோனாவால் மிகக் கடினமான வாரங்களாக அமையவுள்ளன என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

வெளி மாவட்டங்களிலிருந்து வருகின்றவர்களால் மன்னார் மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு 'கொரோனா' வைரஸ் பரவலாம் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து குறித்த நடைமுறையை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

முக்கிய கடமைகளில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் 'பாஸ்' தேவைப்படின் அவற்றுக்குப் பொறுப்பான கிளைத் தலைவர்கள் மற்றும் உரிய பிரதேச செயலர்களின் அனுமதியுடன் கோரிக்கையை பொலிஸ் நிலையத்துக்குச் சமர்ப்பிக்கின்றபோது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஊடாக 'பாஸ்' வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று நீடிக்குமாக இருந்தால் மன்னார் மாவட்ட மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியப்பாடு உள்ளது.

எனவே நெல் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையிலும், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலும் விவசாயிகளை விவசாயத்தில் ஈடுபட வைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவ, கடற்படை, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (த-56)

---

# கொரோனா முறைப்பாடு 1933 க்கு அறிவிக்கலாம்!

கொழும்பு, ஏப். 4

கொரோனா வைரஸ் தொடர்பில் மக்கள் தங்கள் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு 1933 என்ற இலக்கத்தை பொலிஸ் தலைமையகம் அறிமுகம் செய்துள்ளது.

அத்துடன் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்துடனும் மக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-114)

---

# கொரோனா நீங்க விசேட யாகம்

மட்டக்களப்பு,ஏப்.4

கொரனாத் தொற்றிலிருந்து, இலங்கை உட்பட உலக நாட்டு மக்களை விடுவிக்க வேண்டி, மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட யாகம் மற்றும் அபிசேக பூசைகள் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டன.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ஆதி சௌந்தராஜ குருக்களால் நடத்தப்பட்ட இந்த வழிபாடுகளில் ஆலயப் பரிபாலன சபையினர் கலந்துகொண்டனர்.

இதன்போது தனவந்திரி மஹா யாகமும், அதனைத் தொடர்ந்து விசேட அபிசேகமும், விசேட பூசையும் நடத்தப்பட்டன. (க-46)



---



# 100 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

மன்னார் ஏப்.4

கொரோனா அச்சத்தால் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னார் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் உலருணவுப் பொருள்களை வழங்கி வைத்தது.

இலங்கை வாலிபர் தேசிய சபை ஊடாக மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 100 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ப-23)

---

# கொரோனா தொற்று இறுவெட்டு வெளியீடு

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு, மகிழடித்தீவு மாவட்ட வைத்தியசாலையினரால், கொரோனா தொற்று விழிப்புணர்வு இறுவெட்டு நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில்வைத்து, இறுவெட்டு வெளியிடப்பட்டது.

கொரோனா தொற்று ஏற்படும் வழிமுறைகள், அதிலிருந்து மக்கள் தம்மை எவ்வாறு காப்பாற்றிக் கொள்ளுதல், கொரோனா தொற்று ஏற்பட்டதன் பின்பு எவ்வாறு தொற்றுக்குள்ளானவர்கள் நடந்து கொள்வதுபோன்றபல்வேறு விடயங்களை உள்ளடக்கிய வகையில் இறுவெட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் தி.தவனேசன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரனிடம் இறுவெட்டை வழங்கி வெளியிட்டார்.

சுகாதார திணைக்கள உயரதிகாரிகள், மாகாணத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், நகரசபை, உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றுக்கு இறுவெட்டு வழங்கப்பட்டது.

கொரோனா தொற்று விழிப்புணர்வு தொடர்பாக, முதலாவதாக வெளிவந்த இறுவெட்டு இது வென்பது குறிப்பிடத்தக்கது. (க)



---


# ஊரடங்கிலும் தர்மபுரத்தில் கசிப்பு விற்பனை தாராளம்

## நேற்றும் ஒருவர் கைது

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையிலும், கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் கசிப்பு விற்பனை பரவலாக இடம்பெறுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்றையதினம் கசிப்பை உடமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

2 லீற்றர் 45 மில்லிலீற்றர் கசிப்பும், 647 லீற்றர் கோடாவும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன. தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரமோட்டைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யுமிடத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)




# கொவிட்-19

ஓர் அகநோக்கு 01

## தொற்றுநோய்ப் பரவலினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம்

■ Dr. சா. சிவயோகன்
உளமருத்துவ நிபுணர்

'கொவிட்-19' எனும் ஒரு வகை வைரஸ் தொற்றையெண்ணி நாம் அதிகளவு பீதியடைகிறோம். இந்த அளவுக்குப் பீதியடைவது தேவையானதா?

முதலில் நாம் என்பது யார் யாரைக் குறிக்கும் என்று பார்க்க வேண்டும். என்னுடைய அவதானிப்பின்படி மிகப் பெரும்பான்மையினர் பீதி ஏதுமின்றி சாதாரணமான ஒரு வாழ்க்கையையே தற்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆயினும், சுகாதாரத் துறைசார்ந்தவர்களும், இயல்பாகவே தமது சுகாதார நிலை மற்றும் நோய்கள் தொடர்பாக அதிக கரிசனையோடு இருப்பவர்களுமே இந்தத் தொற்றுப் பற்றிப் பீதியோடிருப்பதாகத் தெரிகிறது.

இந்தப் பீதி ஏன் ஏற்படுகின்றது என்பதனைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அது அடிப்படையில் இந்தக் 'கொவிட் 19' தொற்று ஏற்படுத்தும் மரணங்களின் எண்ணிக்கை சார்ந்து இருக்கின்றது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்தியாலமும் நாம் எதிர்கொள்ளும் செய்திகள் அனைத்தும் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கையையும் மற்றும் இத்தொற்றினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையையும் வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொற்றுக்கு என விசேடமான மருத்துவ சிகிச்சைகள் இன்னமும் உருவாகவில்லை என்ற நினைப்பும், பல மரணங்கள் ஒரு கையாலாகாத நிலையில் நடைபெறுகின்றன என்ற ஓர் உணர்ச்சிமயப்பட்ட விவரிப்பும் இந்த நோய் ஏற்பட்டால் அதிலிருந்து மீள்வது அரிது எனும் ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்குகின்றது. இயல்பாக பீதி எம்மைத் தொற்றிக் கொள்கிறது.

பீதி ஏற்படுவதற்குரிய இன்னுமொரு காரணமாக இந்த நோய்த்தொற்றுத் தொடர்பாக இடம்பெறும் நடைமுறைகள் இருக்கின்றன. அவை எமது இவ்வளவு கால வாழ்க்கை அனுபவங்களிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கின்றன. உதாரணமாக ஒருவருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டதெனச் சந்தேகம் எழுந்தால், அந்த ஒருவர் மற்றையவர்களிடமிருந்து தனிப்படுத்தப்படுவர். அவருக்குப் பரிசோதனைகள் நடைபெறும். அவருக்குத் தொற்று இருப்பது உறுதியானால் அவர் இலங்கைச் சுகாதார அமைச்சின் விதிமுறைகளின்படி கொவிட்-19 தொற்றுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார். அதே சமயம், தொற்றுக்கு உள்ளானவரின் குடும்பமும், தொற்றுக்குள்ளானவர் நெருங்கிப் பழகிய ஏனைய நபர்களும் அவர்களது குடும்பத்தவரும், அவர் வேலை செய்த பணியிடத்தில் உள்ளவர்களும் அவர்களது குடும்பத்தவரும், சில சமயங்களில் அவரது கிராமமும் குறிப்பிட்ட காலத்திற்குச் சமூகத்தில் தொடர்ந்து ஊடாடாதபடி தனிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டி ஏற்படும். தொற்று ஏற்பட்டவர் சிகிச்சை பெறுகின்ற போது, எமது வழமைப்படி நாம் அவரை அடிக்கடி சென்றுபார்த்து சுகம் விசாரித்துவிட்டு வர முடியாது. துரதிஷ்டவசமாக அவருக்கு உயிராபத்து ஏற்பட்டால் பின்பு கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் மிகவும் மனக்கஷ்டங்களை ஏறபடுத்தக் கூடியன. இந்த நடைமுறைகள் யாவும் எம்மிடையே ஒரு பதகளிப்பையும், மனக்கிலேசத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்குகின்றது. இயல்பாக பீதி எம்மைத் தொற்றிக் கொள்கிறது.

அத்தியாவசிய சேவைகளில் இருப்போர் தமது பணியின் நிமித்தம் அடிக்கடி வெளியே சென்று வரவேண்டியிருக்கின்றது. அவர்களது குடும்பத்தவர்கள் யாவரும் வீட்டிலிருக்கும்போது அவர்கள் மாத்திரம் வெளியே சென்று வருவதனால் அந்தப் பணியாளர்களுக்கோ, அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கோ இந்தத் தொற்று ஏற்பட்டால் அது அவர்களாலேயே ஏற்படப்போகின்றது எனும் ஒரு பதற்றம் அவர்களிடத்தே காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளையும் அவர்கள் எதிர்காலத்தில் தமக்கு ஏற்படக் கூடிய பழி தொடர்பான குற்றவு ணர்வோடும், பீதியோடும் கழிக்க வேண்டியிருக்கின்றது.



ஆனால், 'கொவிட்-19' தொடர்பான சில அடிப்படையான உண்மைகளை நாம் இவ்விடத்தில் உற்றுநோக்க வேண்டியிருக்கின்றது. இந்த வைரஸ் ஆனது மிக இலகுவில் தொற்றக் கூடியதும், கடுமையான பாதிப்புகள் மற்றும் உயிராபத்தை விளைவிக்கக் கூடியதுமாகும் என்பது உண்மையே. ஆனால், மறுதலையாக, மிகப் பெரும்பான்மையினருக்கு இந்த வைரஸ் தொற்றானது மிகவும் கடுமை குறைந்த அளவுகளிலேயே வந்து போகின்றது.

சிலர் தமக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டது தெரியாமலே தமது வாழ்க்கையைத் தொடர்ந்து செல்கிறார்கள். பொதுவாக நோய்கள் என்பவை அப்படிப்பட்டவையே. பல நோய்கள் பெரும்பான்மையானவர்களுக்கு சிறிய மற்றும் நடுத்தரமான தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், சிலருக்கு அவை கடுமையான விளைவுகளையும் உயிராபத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன. இந்த இயல்பான. இயற்கை விதியோடிணைந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வோமாயிருந்தால் 'கொவிட்-19' தொற்று தொடர்பாக நாம் அதீத பீதியடைவதிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ளலாம்.



அத்தோடு, இப்போதிருக்கும் விஞ்ஞானம்சார் தகவல்கள் இந்தத் தொற்று இலகுவில் உலகைவிட்டுப் போய்விடும் என்று நம்புவதற்குப் போதுமானவையாக இல்லை. ஒருமுறை தொற்று ஏற்பட்டு அதிலிருந்து மீண்டு வரும்போது இந்த வைரஸிற்கு எதிரான எதிர்ப்புச் சக்தி உருவாகி, அது ஓரளவுக்குத்தானும் எதிர்காலத்தில் தொற்று ஏற்படுவதனைத் தடுக்கும் ஆற்றலைத் தந்துதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நீண்டகாலம் எமது சூழலில் இருக்கப்போகும் இந்தத் தொற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான சில திட்டங்கள் எம்மிடையே இருப்பதுவும் எமது பய உணர்வுகளைக் குறைப்பதற்கு உதவி செய்யும்.

அடுத்ததாக, இந்தத் தொற்றுநோய் ஏற்படுவதிலிருந்து எம்மைத் தற்காத்துக் கொள்வதற்கும், எம்மையறியாமல் மற்றவர்களுக்கு அதனைக் கடத்திவிடாமல் இருப்பதற்கும் என சில எளிமையான அடிப்படை விதிகள் உள்ளன. வெளியே நடமாடும் தேவைகளைக் குறைத்துக் கொள்ளுதல், ஒருவரிடமிருந்து ஒருவர் முடியுமானளவு தூரத்தில் விலகியிருந்தபடி காரியங்களை மேற்கொள்ளுதல், கைகளை அடிக்கடி சவர்க்காரம் போட்டு முறையாகக் கழுவுதல் போன்ற நடைமுறைகள் மிகவும் அடிப்படையானவை. இவற்றிற்கு மேலாக, தொண்டை நோ, தும்மல், இருமல் போன்ற அறிகுறிகளை உடையவர்கள் முகக்கவசம் அணிந்து கொள்வதும், நோயாளர்களுடன் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி தற்பாதுகாப்பு உபகரணங்களை உபயோகிப்பதுவும் தேவையானது. இந்த நடைமுறைகளை நாம் ஒழுங்காக, எமது மனச்சாட்சி திருப்தியுறும்படி கடைப்பிடிப்போமானால், இந்த வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான எமது முழுமையான பங்களிப்பை நாம் வழங்கியவர்கள் ஆவோம். இவற்றிற்கு மேலாகவும் நமக்கோ அல்லது எமது குடும்ப உறுப்பினர்களுக்கோ தொற்று ஏற்பட்டால், அது எமது கைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதனைப் புரிந்து ஏற்றுக்கொண்டு, அதுபற்றிய குற்றவுணர்வு ஏற்படாமல் தப்பித்துக் கொள்ளலாம்.

சுருக்கமாக, இந்த வைரஸ் தொற்றுத் தொடர்பாகப் பீதியடைதல் எந்தவிதமான நன்மைகளையும் தரப்போவதில்லை. அது எமது உடலையும் உள்ளத்தையும் வருத்துவதோடு, எமது நோயெதிர்ப்புத் திறனையும் குறைத்துவிடும். ஆனால், இந்தத் தொற்றுநோய் தொடர்பாக மிகவும் விழிப்போடிருப்பது நன்மை பயக்கும். உலகளாவிய இந்தத் தொற்றுநோய் தொடர்பான சரியான தகவல்களைப் புரிந்து கொள்வதும், நாம் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளிலும் மனம்நிறை கவனத்தோடு (mindfulness) இருப்பதுவும் மிகவும் முக்கியமானது. ■

## தந்தை சஜித்துடன்..
## மகன் மஹிந்தவுடன்...

அரசியலுக்குள் நுழையும் வாரிசுகள் தந்தை வழியையே பின்பற்றுவார்கள் என்று சொல்ல முடியாது.கொள்கையை விடவும் அரசியல் இலாபத்தின் பக்கமே அவர்கள் அதிகம் நாட்டம் கொள்கிறார்கள்.
ஜே.வி.பி.யின் மறைந்த தலைவர் ரோஹன விஜயவீரவின் மகன் அரசியலுக்குள் நுழைந்துள்ளார்.அவர் ஜேவிபியில்தான் இணைவார் என்று எல்லோராலும் எதிர் பார்க்கப்பட்டது. அவரோ இலாபம் உள்ள பக்கம் சாய்ந்துவிட்டார். அதுபோல்தான் மற்றுமொரு வாரிசு. முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவின் மகன்.அவரும் அப்ப டியேதான். தந்தையோ குடும்ப அரசியலை எதிர்த்து மஹிந்த தரப்பில் இருந்து கழண்டு வந்துவிட்டார். இப்போது சஜித் பக்கம் உள் ளார். அவரது மகனோ தந்தையின் இந்த நிலைப்பாட்டை ஏற்கவில்லையாம். ஆட்சி உள்ள பக்கம் இருந்து அனுபவிப்பதையெல் லாம் அனுபவித்து விடுவோம் என்ற நிலைப் பாட்டில் இருப்பவராம் அவர். அதனால்தான் அவர் மஹிந்தவோடு ஒட்டியுள்ளாராம்.

***காற்றுள்ளபோதே***
***தூற்றிக்கொள் என்பது இதைத்தான்.***

## பஸிலுக்கு வந்த பயம்



இந்த கொரோனா முழு உலகையும் ஆக் கிரமித்துள்ளதால் எல்லோரும் மரண பயத் தில் உறைந்து போயுள்ளனர்.
அதிலும்,கொரோனாவின் தாக்கம் அதிகமாக வுள்ள சில நாடுகளில் உள்ள உறவினர்களை எப்படி இலங்கைக்கு அழைத்துக்கொள்வது என்று தெரி யாமல் தடுமாறுகிறார்கள் சில உறவினர்கள்.
வெளிநாடுகளில் இருந்து விமானங்கள் இலங்கைக்குள் வரு வது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.
இந்தத் தடையால் தங்கள் உறவுகளை நாட்டுக்குள் அழைத் துக்கொள்ள முடியாமல் கவலைப்படுபவர்களுள் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக் ஷவும் ஒருவர். ஆமாம்...அவரது மனைவி, பிள்ளைகள், ஜனாதிபதி கோத்தாவின் பிள்ளைகள் என ஒரு பட்டாளமே அமெரிக்காவில் சிக்கி இருப்பதுதான் இதற்குக் காரணம்.
இலங்கையில் மக்களை கொரோனாவில் இருந்து பாதுகாப்ப தற்காகப் போராடுகிறேன்.ஆனால்,எனது உறவினர்களைப் பாதுகாக்க முடியவில்லையே என்று புலம்புகிறாராம் பஸில்.

## இப்படித்தான் போரையும் வென்றாராம்



கொரோனா வைரஸைக் கட்டுப்ப டுத்துவதற்காக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளில் ஒன்றுதான் சர்வ கட்சி தலைவர்களின் கூட்டம். இந்தக் கூட்டத்தை இரண்டு தட வைகள் கூட்டிவிட்டார் மஹிந்த. கட்சித் தலைவர்களின் ஆலோச னைகளை பெற்று அந்த ஆலோச னைகளையும் நடைமுறைப்படுத் துவதுதான் இதன் நோக்கமாம்.
கொரோனாவைக் கட்டுப்படுத்தும் அரசின் ஏனைய நடவடிக்கை ளைவிட சர்வகட்சித் தலைவர்க ளின் கூட்டம்தான் வெற்றியளிக்கும் என்று மஹிந்தவின் விசுவாசிகள் சிலர் நம்புகிறார்கள்.
ஏன் தெரியுமா?
யுத்தத்தை வெல்வதற்காக மஹிந்த பல தடவைகள் சர்வ கட்சித் தலை வர்களின் கூட்டங்களைக் கூட்டி ஆலோசனைகளை பெற்றார். அந்த ஆலோசனைகளின்படிதான் யுத்தத்தை அவரால் வெல்ல முடிந் ததாம். அந்த நம்பிக்கையில்தான் மஹிந்த இந்தப் பிரச்சினையின் போதும் சர்வ கட்சிக் கூட்டங்களை கூட்டி வருகிறார். இதில் பெறப்படும் ஆலோசனைகளின் ஊடாக கொரோனா வைரஸை முற்றாக ஒழிக்க முடியும் என்று மஹிந்த வும் அவரது விசுவாசிகளும் உறு தியாக நம்புகிறார்களாம்.

## பொலிஸ் அதிகாரியின் கனவு

இலங்கையில் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக ஓடி ஓடி உழைப்பவர்க ளுள் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹனவும் ஒருவர். பாவம் சரியான தூக்கம் இன்றி...சரியான உண வின்றி கஷ்டப்படுகிறார் மனுஷன்.
டொக்டர்கள்போல் நீங்களும் கஷ்டப்படுகிறீர்களே என்று அவ ரிடம் கேட்டால் அப்போதுதான் ஒரு பரம ரகசியத்தைச் சொல்கி றார் அவர்.
என்ன ரகசியம் அது? அவருக்கு ஆரம்பத்தில் வைத்தியராக வேண்டும் என்ற கனவுதான் இருந்ததாம்.அந்தத் துறைக்கு அப் போது இருந்த போட்டி காரணமாகவே அவரால் அந்தத் துறைக்குள் நுழைய முடியாமல் போனதாம்..
அதன் பின் அவர் தெரிந்து எடுத்த துறைதான் இந்த பொலிஸ் துறை.
தன்னால் டொக்டர் ஆக முடியவில்லை என்ற ஏக்கம் அவ்வப்போது வந்துதான் போகுதாம் அவருக்கு.

எம்.ஐ.முபாறக்






## அடிக்கிற கை தான் அணைக்கும்

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவதை நாம் அறிவோம்.அவற்றுள் ஒன்றுதான் ஊரடங்கு.
இலங்கையை முற்றாக முடக்கிவிட்டு இந்த நோயை விரட்டியடிக்க வேண்டும் என்று அரசு விரும் பினாலும்கூட, மக்கள் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக இல்லை.
இதனால்தான் படையினர் களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.ஊரடங்கை மீறுபவர்கள் கைது செய் யப்படுவதும் அடித்து துவம்சம் செய்யப்படுவதும் சகஜமாகிவிட்டது. இதன்போது சுவாரசியமான சம்பவங்களும் இடப்பெறுவதை காணக்கூடியதாக உள்ளது. அதில் ஒன்று கடந்த வாரம் ஏறாவூ ரில் இடம்பெற்றது. ஊரடங்கை மீறி ஓரிடத்தில் ஒன்றுகூடி கதைத்துக்கொண்டிருந்தார்கள் சில இளைஞர்கள். சடாரென அங்கு வந்து இறங்கினார்கள் இராணுவத்தினர். பிறகு சொல்லவும் வேண் டுமா?துவைத்து எடுத்துவிட்டார்கள் அந்த இளைஞர்களை.அதில் ஒரு இளைஞனுக்கு செம அடி. அடித்த இராணுவத்துக்கோ இரங்கிவிட்டது மனம். அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? பக்கத்து வீட்டில் 'மூவ்' தைலத்தை வாங்கி அந்த இளைஞனின் காயங்களுக்குப் பூசி அறிவுரைகள் கூறி அனுப்பியுள்ளார்கள் அவர்கள் அந்த இளைஞனை...என்ன ஒரு மனிதாபிமானம்.

***அடிக்கிற கைதான் அணைக்கும் என்று சும்மாவா சொன்னார்கள்.***

# கர்ப்பிணிகளும் சிறுவர்களும் வீட்டிலிருந்து வெளியேறாதீர்

## சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

**கல்முனை, ஏப். 4**

**கொரோனா வைரஸ் தாக்கம் நாடு முழுவதும் அதிகரித்து வருவதால், கர்ப்பிணித் தாய்மாரும் சிறுவர்களும் அவசிய தேவையின்றி மருத்துவமனைகளுக்கும், பொது இடங்களுக்கும் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது: கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு வயதானவர்களும், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களும் காரணமின்றி பொது இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

அடிக்கடி போதியளவு தண்ணீர் அருந்துவதோடு, போசணையுள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். காய்ச்சல், தடிமன், இருமல் ஏற்படுமாக இருந்தால் மருத்துவமனைகளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பிரிவுக்குச் சென்று அங்கு வழங்கப்படும் அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும். கொரோனா வைரஸ் தாக்கத்தால் தற்போது இலங்கையில் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து நாம் எல்லோரும் பாதுகாப்பாக இருப்பதற்கு அரசு விடுத்த அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் போது பொதுமக்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொது இடங்களுக்கு செல்ல வேண்டும். சுகாதாரத் திணைக்களத்தாலும், பொலிஸாராலும் மக்களின் நலன் தொடர்பாக அறிவிக்கப்படும் தெளிவூட்டல்களை மக்கள் பின்பற்றி நடக்க வேண்டும்- என்றார். (த-114)

# 'ஆமாம் சாமி' போடுவதற்கே இ. தொ.கா வாய் திறக்கும்

## வேலுகுமார் பகிரங்க குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். -

அரசாங்கத்திடம் முழுமையாக சரணாகதியடைந்து 'ஆமாம் சாமி' போடுவதற்கு மட்டுமே வாய்திறக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மலையக மக்களின் நலனில் துளியும் அக்கறை இல்லை. இதனாலேயே நிவாரணங்கள் எதுவும் கிடைக்காதபோதிலும், கிடைத்துவிட்டது என்ற தொனியில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"கொரோனா வைரஸ் தாக்கத்தால் முழு நாடும் முடங்கியுள்ளது. மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் பல நிவாரணத்திட்டங்களை ஜனாதிபதி அறிவித்தாலும் அவை நடைமுறையில் இல்லை. குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள்கூட மக்களுக்கு இன்னும் உரிய வகையில் கிடைக்கவில்லை. அதேபோல் மலையகத்தில் அரச இயந்திரம் திருப்திகரமாக இயங்கவில்லை. இதனால் எமது மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுவருகின்றனர். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டி, அதற்கான தீர்வுத் திட்டங்களையும் எமது தலைவர் மனோ கணேசன் முன்வைத்துள்ளார். மலையகத்தில் எல்லாமே சரியாக நடக்கிறது என அறிக்கைவிட்டு வந்த தரப்பு இதனால் கூட்டத்தில் விழிபிதுங்கி நின்றது. "பெருந்தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள், ஓய்வூதியர்கள், தினக் கூலிகள், சமுர்த்தி பெறுநர்கள் ஆகிய நான்கு பிரிவையும் அரசாங்கம் கவனிக்கிறது. இவர்களுக்கு அரச நிவாரணங்கள் முறையாகக் கிடைக்கின்றன." என்று இ.தொ.கா. பிரதிநிதி அப்பட்டமாகப் பொய்யுரைத்துள்ளார். மேற்படி தரப்புகளுக்கு நிவாரணங்கள் முறையாக கிடைக்காத நிலையில், சுயநல அரசியலுக்காக அவை கிடைக்கின்றன எனக் கூறி நெருக்கடியான சூழ்நிலையிலும் மலையக மக்களை அப்பட்டமாக இ.தொ.கா. காட்டிக்கொடுத்துள்ளது. மக்களுக்கு எது நடந்தாலும் பரவாயில்லை தமக்கு பதவிகள் தான் முக்கியம் என்பதற்காக 'ஆமாம் சாமி' போடுவதற்கு மட்டுமே வாய் திறக்கும் இ.தொ.காவின் முகத்திரை தற்போது கிழிந்துள்ளது. எமது தலைவர் உட்பட நாம் களப்பணியில் ஈடுபட்டுவருகின்றோம். இருந்தாலும் அதனை வைத்து விளம்பர அரசியல் நடத்தவில்லை. ஆனால் சவர்க்காரத்தை கொடுத்துவிட்டு ஏதோ சாதனை படைத்து விட்டதுபோல் சிலர் அறிக்கை விடுக்கின்றனர்" என்றுள்ளது.



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் 45 பட்டதாரிப் பயிலுநர்கள் தமது சம்பளத்தின் மூலம் திரட்டப்பட்ட ஒரு தொகை நிதியை மனிதாபிமான நிவாரண பணிக்காக, பிரதேச செயலர் எஸ்.சுதர்சனிடம் நேற்றுக் கையளித்தனர். (க)

### கிளிநொச்சியில்

# 28,150 குடும்பங்களுக்கு அரசின் உதவிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் 46 ஆயிரத்து 694 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 925 பேர் வாழும் நிலையில், இதுவரை 28 ஆயிரத்து 150 குடும்பங்களுக்கு அரச உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா அபாயம் காரணமாக ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில், தொழில் பாதிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள வறுமை நிலையைப் போக்க இதுவரை 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் மாற்றுவலுவுடையவர்களுக்கான கொடுப்பனவு ஆயிரத்து 140 குடும்பங்களுக்கும், சிறுநீரகப் பாதிப்பால் சிகிச்சை பெறுவோருக்கான கொடுப்பனவு 292 குடும்பங்களுக்கும், முதியோர் கொடுப்பனவு 721 பேருக்கும், 70 வயதுக்கு மேற்பட்டோர் கொடுப்பனவு 3 ஆயிரத்து 823 பேருக்கும், 100 வயதுக்கு மேற்பட்டவருக்கான கொடுப்பனவு ஒருவருக்கும், கர்ப்பிணிகளுக்கான கொடுப்பனவு மூவாயிரம் பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு நிவாரண வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (க-105)

### ஊரடங்கில்

# 'பார்' உடைத்து மதுபானம் திருட்டு

கொழும்பு, ஏப்.4

ஹட்டன், டிக்கோயா புளியாவத்தை நகரப்பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை மதுபான விற்பனை நிலையமொன்று உடைக்கப்பட்டு சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான மதுபானப் போத்தல்கள் களவாடப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு மதுபான நிலையம் உடைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிக்கு நேற்று முன் தினம் காலை வருகை தந்திருந்தவர்கள், மதுபான விற்பனை நிலையம் உடைக்கப்பட்டுள்ளதை கண்டு, அது தொடர்பில் உரிமையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து அங்கு வந்த உரிமையாளர், இது தொடர்பில் நோர்வூட் பொலிஸில் முறைப்பாடு செய்தார். சந்தேக நபர்கள் எவரும் நேற்று மாலைவரை கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-44)

# பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள்

ஒட்டுசுட்டான்,ஏப்.4

ஒட்டுசுட்டான் புதியநகர், பெரியபுளியங்குளம், சிவநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஒருபகுதியினருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

காலம்சென்ற சமாதான நீதவானும் ஒட்டுசுட்டான் தான்தோன்றிச்சரர் ஆலய தர்மகர்த்தாவுமான வ.உ. சிவராசாவின் பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-500)



# புலம்பெயர் மக்களால் 51 குடும்பங்களுக்கு உதவி

சாவகச்சேரி,ஏப்.4

தென்மராட்சி சமூக மேம்பாட்டு நிலையத்தினர் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்களின் நிதிப் பங்களிப்புடன், தெரிவு செய்யப்பட்ட 51 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, புலம்பெயர் நாடுகளில் வதிபவர்களின் நிதியுதவியில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக மீசாலை மேற்கைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கும், மட்டுவிலைச் சேர்ந்த 11 குடும்பங்களுக்கும் அங்குள்ள பொது அமைப்புக்கள் ஊடாக நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டன. (க-9)

உதயன்
newuthayan.com



கொரோனவின் கோரப்பிடியில் இருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டி நயினாதீவு ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்றது. சிறப்புப் பூஜை வழிபாடு மற்றும் யாக பூசையும் நடைபெற்றது .இதில் நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ப–7)

# வருமானமற்றோருக்கு உடனடியாக 5,000 ரூபா

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

**யாழ். மாவட்டத்தில் எந்த வருமானமும் அற்றவர்களுக்கு உடனடியாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்று யாழ். மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது,

யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 94 ஆயி ரம் குடும்பங்கள் தற்போது வாழ்கின்றனர். இவர்களில் அரச ஊழியர்கள் குடும்பம் , ஓய்வூதியர்கள் குடும்பம் என சுமார் 36 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. அதனை விட 76 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி விநியோகம் இடம்பெறுகின்றது. மாற்றுவலுவுள்ளோர், முதியோர் என்போ ருக்கு கொடுப்பனவுகளும் வழங்கப்படு கின்றன. இவற்றின் அடிப்படையில் மொத் தமாக ஒரு லட்சத்து 28 ஆயிரம் குடும்பங் களுடன், தற்போது விவசாய மற்றும் மீன் பிடிஓய்வூதியங்களும்வழங்கப்படுகின்றன. அதனைவிட ஐரோப்பிய நாடுகள் , கனடா வாழ் உறவுகள் தவிர்ந்த ஏனையவர்க ளின் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுமையாக வாழும் மக்களில் நாளாந்தம் கூலி வேலை செய்து வாழ்வா தாரம் நடத்துபவர்களுக்கு 5 ஆயிரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையு டன், அதற்கான விபரங்கள் உரிய தரப் புக்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.

15 பிரதேச செயலாளர் பிரிவிலும் 16 ஆயி ரத்து 514 குடும்பங்கள் இவ்வாறு வாழ்வ தாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான அனுமதியை உடன் எதிர் பார்க்கின்றோம் இதற்காக 8 கோடியே 25 லட்சத்து 70 ஆயிரம் ரூபா தேவை எனக் கோரப்பட்டுள்ளது. விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்- என்றார்.(சு-105)

# கல்முனையில் மீன் விலை உச்சம்

அம்பாறை, ஏப்.4

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மீன்களின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது என்று நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடலில் ஏற்பட்ட திடீர் மாற்றம், அலை களின் வேகம், காற்றமுத்தம் காரண மாக மீனவர்கள் கடலுக்குச் செல்லா ததாலும், நேற்று வெள்ளிக்கிழமை என்பதால், பெரும்பாலான முஸ்லிம் மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக கடலுக் குச்செல்லாததாலும், சூரை ஒருகிலோ 350 ரூபா முதல் 450 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதுடன் முரல் ஒரு கிலோ 800 ரூபாய் முதல் ஆயி ரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட் டுள்ளது. (ப)



# 7,525 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

கிளிநொச்சி,ஏப்.4

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 7 ஆயிரத்து 525 குடும்பங்களுக்கு தன்னார்வலர் ஒருவரால் உலர் உண வுப்பொதிகள் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக நாளாந்தம் கூலித் தொழில்செய்து வாழ்ந்த குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ் வாறு பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட் டத்தைச் சேர்ந்த 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 7 ஆயிரத்து 525 குடும்பங்களுக்கு தலா 900 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட் டன. (ஐ-214)

# கொரோனாவால் இறந்தவரின் பேரன், மருமகனுக்கும் தொற்று!

கொழும்பு ஏப். 4

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று கார ணமாக உயிரிழந்த மூன்றாவது நோயாளியின் மருமகன் மற்றும்பேரன் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது கொரோனா தொற் றுக்குள்ளாகி 72 வயதுடைய மருதானைப் பகுதி யைச் சேர்ந்த ஒருவர் அங்கொடை ஐ.டி.எச் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்திருந்தார். அவரது பேரப்பிள்ளைக்கும் மருமகனுக்கும் மேற்கொள்ளப்பட்ட கொரோனாச் சோதனையில் அவர்களுக்கும் தொற்றியிருப்பது உறுதியாகியுள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உறுதியாகி 24 மணி நேரங் கள் கடப்பதற்கு முன்னர் குறித்த நபர் உயிரிழந்த நிலையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை உயிரிழந்த நபரு டன் நெருக்கமாகச் செயற்பட்ட 300 பேர் புலனாய் வுப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்டுள்ள தாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார். குறித்த 300 பேரை தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட் டார். (ப-114)





# இடம் மாறித் தங்குவோர் பதிவு செய்ய அறிவுறுத்து

உணவுப் பற்றாக்குறை காரணமாக கிராம அலுவலர் பிரிவில் இருந்து மற்றொரு கிராம அலுவலர் பிரிவுக்கு அல்லது ஒரு பிரதேசத்தில் இருந்து மற்றொரு பிரதேச செயலர் பிரிவுக் குச் சென்று உறவினர் வீடுகளில் தங்குவோர் தாங்கள் தங்கும் பிரிவு கிராம அலுவலருக்கும், பொதுச் சுகா தார பரிசோதகருக்கும் அறிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அவ்வாறு அறிவிக்காது தங்குவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதார மருத் துவ அதிகாரி பணியகத்தினர் அறி வித்துள்ளனர் .

கொரோனா வைரஸ் காரணமாக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட் டத்தால் ஏற்பட்ட உணவுப் பற்றாக் குறை காரணமாக பல குடும்பங்கள் உறவினர் வீடுகளில் தங்கி வருகின் றனஎன்றுதகவல்கள்கிடைத்துள்ளன. குடும்பங்கள் இடம்மாறி வசிப்பதாக தகவல்கள் வழங்குவோர் உண் மைத் தகவல்களை மட்டும் வழங்குமாறும், பொய்யான தக வலை வழங்கினால் அவர்கள் மீது வதந்தி பரப்பும் குற்றச்சாட்டின்பேரில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தென்பகுதியால் திரும்பியோர் பதிவு செய்க!

சாவகச்சேரி, ஏப்.4

சாவகச்சேரியில் இருந்து தொழில் நிமித்தம் தென்பகுதிக்குச் சென்ற பலர், அங்கு தொடர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பியுள்ளனர் என்று அறியப்படுகிறது.

அவ்வாறு திரும்பியவர்கள் உடனடியாகக் கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருக்குத் தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் தொழில் செய்ய முடியாத நிலையில் உணவுப் பொருள்கள் ஏற்றி வரும் வாகனங்களில், உதவியாளர் எனக் கூறிச் சிலர் சொந்த இடங்களுக்கு வந்துள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலை மற்றும் கட்டப் பணிகளுக்காக சென்றவர்களில் பலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்துள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்து வருகின்றன.


எனவே அவ்வாறான வர்கள் அறிவித்தல் இன்றித் தங்குவது கண்டு பிடிக்கப்படின், குடும்பத்துடன் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்று சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். (சு-9)

# கொரோனாச் சோதனை: 10 ஆயிரம் கருவிகள்

### சீனா வழங்கும்

**கொழும்பு, ஏப். 4**

**இலங்கைக்கு 10 ஆயிரம் 'கொவிட் 19' பரிசோதனைக் கருவிகளை சீனா வழங்கவுள்ளது. அந்த நாட்டிலுள்ள முன்னணி 5 நிறுவனங்கள் ஊடாக இது அனுப்பிவைக்கப்படும் என்று தெரியவருகின்றது. இலங்கையில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மாத்திரம் 21 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.**



அவர்களின் குடும்ப உறவினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணிய நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஏனையோரையும் பரிசோதிப்பதற்கு பரிசோதனைக் கருவிகள் தேவைப்படுகின்றன.

மார்ச் 22 ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து 5 ஆயிரம் , கொரோனாச் சோதனைக் கருவிகளை அரசு கொள்வனவு செய்து, மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது.

இந்த நிலையில் சீனா ஆயிரம் பரிசோதனைக் கருவிகளையும், 50 ஆயிரம் முகக்கவசங்களையும் கொடையாக நேற்று வழங்கியுள்ளது. கொழும்பிலுள்ள சீனத் தூரதகத்தின் ஊடாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன், விரைவில் 10 ஆயிரம் கருவிகள் அனுப்பிவைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,44)

## பயணிகளை ஏற்றும் வாகனங்களைப் பதியவும்

சாவகச்சேரி, ஏப்.,

வெளி மாவட்டங்களுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் அவற்றின் சாரதிகள் அந்தந்த சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக புலம்பெயர் நாடுகளுக்குச் செல்வோரை விமான நிலையத்துக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்கள், சுகாதார மருத்துவ அதிகாரிப் பணியகத்தில் பதிவு செய்யப்படுவதுடன் சாரதிகள் மருத்துவச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தகவலை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்துக்குப் பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மற்றும் சாரதியால் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளதால், இந்த நடைமுறையைப்பின்பற்றுமாறு அறிவித்துள்ளனர். (க)

## வேல்ட் விசனால் மக்களுக்கு உலருணவு

யாழ்ப்பாணம்,ஏப்.4

சங்கானை மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கான, உலருணவுப் பொதிகள், வேர்ல்ட் விசன் நிறுவனத்தினரால், மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆயிரத்து 300 குடும்பங்களுக்கும், சங்கானையைச் சேர்ந்த 850 குடும்பங்களுக்கும் இரு பிரிவுகளாக வழங்குவதற்கான உலர் உணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

அரிசி, மா, கடலை, பருப்பு, எண்ணெய், மீனின் மற்றும் உப்பு உட்பட ஆயிரத்து 790 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 10 குடும்பங்களுக்கு அலுவலர் உதவி

ஊரடங்குச் சட்டத்தால் செட்டிக்குளம் பகுதியில் உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் அல்லலப்படும் 10 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

சமூகசேவையாளர் ஜெகன், பூசகர் ராஜ் சர்மா ஆகியோரால் குறித்த பொருள்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கண்ணா என்பவர் வழங்கியிருந்தார். (சு-110)



## உலக மக்களைக் காக்குமாறு கருமாரி அம்மனிடம் வழிபாடு

வவுனியா. ஏப். 4

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து உலக மக்களை காக்கக் கோரி வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

ஆலயத்தின் பிரதம குரு பிரபாகரகுருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட வழிபாட்டில் கோவிலைச் சூழவுள்ளவர்கள் கலந்துகொண்டு உலக மக்களின் நலனுக்காக பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

வழிபாட்டில் கலந்துகொண்டவர்கள் முகப் பாதுகாப்புக் கவசங்களை அணிந்திருந்தனர். சமூக இடைவெளியையும் பின்பற்றியிருந்தனர். (சு-110)

## மருத்துவ பரிசோதனை அறிக்கை நிறுத்தம்

சாவகச்சேரி, ஏப்.4

வெளிமாவட்டங்களுக்குச் செல்வோருக்கு வழங்கப்பட்டு வந்த மருத்துவப் பரிசோதனை அறிக்கை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளதால் அறிக்கை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## மனிதாபிமான உதவி ஆபத்தாகக் கூடாது

யாழ்ப்பாணம், ஏப்.4

வங்கிச் சேவை மற்றும் ஓய்வூதியப் பணம் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வங்கிகளுக்குச் சென்று வருகிறார்கள்.

வங்கிச் சேவையைப் பெற்றுக்கொள்ள வருபவர்கள் சில இங்களில் நீண்ட வரிசையில் நிற்கின்றனர். அவர்கள் வயதானவர்கள் என்பதால் மனிதாபிமானம் கருதி கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன. அது சுகாதாரத் தொற்றாகிவிடாத நிலையில் அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில இடங்களில் ஒரு கதிரையில் அமர்ந்த நபர் வரிசையில் அடுத்த கதிரைக்கு நகர்ந்து அமருவார். ஆகவே நோய்த் தொற்று ஒருவரில் இருந்து மற்றையவர்களுக்குப் பரவும் வாய்ப்பு உள்ளதாகச் சுகாதாரப் பிரிவு தெரிவிக்கின்றது. எனவே மனிதாபிமானம் ஆபத்தாக மாறிவிடக் கூடாது என்பதில் கவனம் தேவை என்று தெரிவிக்கின்றனர். (சு-7)



### ஒட்டுசுட்டானில்

## நடமாடும் வியாபாரம்

முல்லைத்தீவு, ஏப். 4

ஒட்டுசுட்டான் பகுதியில் ஊரடங்கு நேரத்தில் அனுமதிக்கப்பட்ட வியாபாரிகள் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊரடங்குச் சட்டம் இருக்கும் வேளைகளில் மக்கள் வெளியேறமுடியாத நிலையிலும் சந்தைகள், வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாமையாலும் மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மரக்கறிகளைப் பெறமுடியாத நிலையில் நடமாடும் வியாபாரம் இடம் பெறுகின்றது. மக்களுக்கு இது பெரும் நன்மையளிக்கிறது. வீட்டுக்குத் தேவையான பொருள்கள் யாவும் நடமாடும் வியாபாரம் மூலம் பெறக்கூடியதாக இருப்பதாக மக்கள் தெரிவித்தனர். (சு-500)

கொரோனாவுக்கு எதிரான விழிப்புணர்வு

# விளையாட்டு வீரர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு!

புதுடெல்லி, ஏப். 4

கொரோனாவுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று 40 விளையாட்டு வீரர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் இந்தியப் பிரதமர் மோடி.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சமூக இடைவெளி அவசியம் என்பதால் பிரதமர் மோடியின் அறிவிப்புபடி நாடுமுழுவதும் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தேவையின்றி வெளியேவர தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்ல மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தம்மாலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று விளையாட்டுலகப் பிரபலங்கள் 40 பேருக்கு அழைப்பு விடுத்துள்ளார் மோடி. சச்சின் ரெண்டுல்கர், கங்குலி, விராட் கோலி பி.வி.சிந்து, ஹிமா தாஸ் உள்ளிட்ட விளையாட்டுலக நட்சத்திரங்களுடன் நேற்று காணொலி வாயிலாக உரையாடியதை அடுத்தே மேற்படி அழைப்பை அவர் விடுத்துள்ளார். (ம)



# ‘கொரோனா’ ‘லொக்டவுன்’

## குழந்தைகளின் பெயர்கள் இவை

இந்தியா முழுவதும் கொரோனோ வைரஸ் தொற்றுக் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தங்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு கொரோனோ என்றும் லொக்டவுன் என்றும் விநோதமான பெயர்களைச் சூட்டியுள்ளனர் தம்பதிகள்.

உலகை உலுக்கிவரும் கொரோனா தொற்று இந்தியாவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் இந்தியா முழுவதும் 21 நாட்கள் தொடர் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தியாவின் உத்திரப் பிரதேசத்தில் இரு குடும்பங்கள் ஊரடங்கு நேரத்தில் தங்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு வினோதமான முறையில் பெயர்களைச் சூட்டியிருக்கி ன்றன. உத்திரப் பிரதேசத்தில் உள்ள கோரப்கபூரில் பிறந்த குழந்தைக்கு கொரோனா என்று ஒரு குடும்பம் பெயர் சூட்டியுள்ளது. அதே போல தியோரியா மாவட்டத்தில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு லொக்டவுன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. (ம-114)

# திருமணத்தை ஒத்தி வைத்த மருத்துவர்



புதுடெல்லி, ஏப். 4

கேரளத்தின் கண்ணூரைச் சேர்ந்த பெண் மருத்துவர் ஒருவர் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பது தடைப்படும் என்பதற்காகத் தனது திருமணத்தையே ஒத்திவைத்த சம்பவம் அனைவரையும் நெகிழ வைத்துள்ளது.

கண்ணூரில் உள்ள பரியரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவராக இருப்பவர் ஷிபா. இவருக்கும் துபாயைச் சேர்ந்த அனுஸ் முகமது என்ற தொழிலதிபருக்கும் மார்ச் 29ஆம் திகதி திருமணம் நடத்த ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், கேரளத்தில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமானதைத் தொடர்ந்து பரியரம் மருத்துவமனையிலும் கொரோனா தொற்றுக்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. இவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் குழுவில் ஷிபாவும் சேர்க்கப்பட்டார்.

எனினும், அவரது திருமணத்தை முன்வைத்து அதில் இருந்து விலக்களிக்க மருத்துவமனை நிர்வாகம் முன்வந்தது. ஆனால் ஷிபாவோ, தனது திருமணத்தை இன்னொரு நாளுக்குத் தள்ளிவைத்துக் கொள்ளலாம் எனச் சொல்லிவிட்டு தொடர்ந்து பணியில் இருக்கிறார்.

இந்நேரம் திருமணம் முடிந்து புது வாழ்க்கையைத் தொடங்கியிருக்க வேண்டிய ஷிபா இப்போது என்95 மாஸ்க், பாதுகாக்கப்பட்ட மருத்துவ உடைகளோடு சிகிச்சைக் களத்தில் இருக்கிறார். தனது தன்னலமற்ற சேவையின் மூலம் தற்போது இணையதளவாசிகளால் கொண்டாடப்படுகிறார் ஷிபா. (ம)

## அவிகனுக்கு...

ங்கையில் ‘கோவிட் 19’ நோயாளிகளுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

‘அவிகன் மருந்தை கோவிட் 19 நோயாளிகளுக்கு பயன்படுத்த பரிசோதனை செய்யப்படவில்லை’ என்று மேற்படி ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை உறுப்பினரும், அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையின் மருத்துவ ஆலோசகருமான ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இம்மருந்து இலங்கைக்கு கொடையாக வழங்கப்பட்டுள்ள போதிலும் ஜப்பானில்கூட ‘கோவிட் 19’ வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கேனும் வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

‘வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களை இம்மருந்து மூலம் குணப்படுத்தமுடியுமா என்பது தொடர்பில் தற்போதே ஆய்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன.’ என்று தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றுமொரு உறுப்பினரான லக்குமார் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இம்மருந்தை பயன்படுத்தினால் பக்கவிளைவுகள் ஏற்படக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இம்மருந்தை கொரோனா நோயாளிகளுக்கு வழங்குவதற்கு மருத்துவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்து பரிசோதிக்கப்பட்டு, அதன் பாவனைக்கு உகந்தது என விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்படும்வரை அதற்கு இங்கு அனுமதி வழங்கக்கூடாது என வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஒ,5,44)

## 159...

பாதிக்கப்பட்டவர்களில் நேற்று மேலும் மூவர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய இதுவரை 24 பேர் முழுமையாகக் குணமடைந்துள்ளனர். அதேவேளை, இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளனர். ஏனைய 131 பேரும் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை, 30 வைத்தியசாலைகளில் 250 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம22)

## சமயங்கள்...

வித்துள்ளதாவது

சமயங்களை விமர்சிப்பதைத் தவிருங்கள். சைவக் கோவில்களை சிலர் திட்டமிட்டு விமர்சித்து வருகிறார்கள். இது மிகவும் மனவருத்தத்துக்குரியது. திருக்கோவில்களை விமர்சிப்பதைத் தவிருங்கள். சில பிறமதத்தவர்கள் புனைபெயர்களில் சைவக் கோவில்களை இத் தருணத்தில் விமர்சித்து மக்களைக் குழப்பமடையச் செய்வதாக பலர் முறையிடுகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக சைவ மக்கள் கவலைப்பட வேண்டாம். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க எனப் பதில் கூறுதல்தான் எங்கள் மரபு.

வீண் விமர்சனங்களை யாரும் வளர்க்காதீர்கள். உங்களால் செய்யக்கூடிய உதவிகளை உங்கள் வசதி போல் செய்யுங்கள். தர்மகாரியங்களை அமைதியாகச் செய்யுங்கள். திருக்கோவில்களில் நித்திய பூசையைத் தவிர ஏனைய விசேட வைபவங்களைச் செய்வதைத் தவிருங்கள். மனதில் எங்கள் தலங்களை நினைந்து வழிபாடு செய்யுங்கள். எவரையும் குறை கூறுவதைத் விடுத்து எல்லோருக்காகவும் மன்றாடுங்கள். தம் உயிரைப் பொருட்படுத்தாது ஆபத்தான காலத்தில் பணியாற்றும் அனைவரையும் நன்றி சொல்லி அவர்களின் சேவைக்காகவும் பிரார்த்தியுங்கள். சைவமக்களே உங்கள் மனத்தாலும் வார்த்தையாலும் செயலாலும் நல்லதையே நனவிலும் கனவிலும் காத்துக்கொள்ளுங்கள். இமைப் பொழுதும் இறையருளே துணை” என்றுள்ளது. (ப)

## கைது..

கள் இடம்பெற்றுள்ளன.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் மார்ச் 20ஆம் திகதி முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை மீறியமைக்காக நேற்றுக் காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரையான 06 மணித்தியால காலப்பகுதியினுள் மட்டும் 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 70 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ22)

## தாவடிக்கு...

சேர்ந்தவர் என்பதால், அந்தப் பகுதி அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது இவ்வாறான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் எனவும், குறித்த பகுதிக்குள் இருக்கும் தனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கு இருமல், தும்மல், காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக கடமையில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் பிரிவினர் அல்லது சுகாதாரப் பிரிவினருக்கு தெரியப்படுத்த வேண்டும். அவர்களின் தேவைகள் அனைத்தும் கிராம அலுவலர் ஊடக பெற்று தரப்படும். இந்த நடைமுறைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப7)

## தாவடியில்...

கொரோனா தொற்று உள்ளதா எனக் கண்டறியும் வகையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள வைத்தியசாலைகளின் பணியாளர்கள், போதனா வைத்தியசாலைப் பணியாளர்கள் இணைந்துதாவடிப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் வைத்து உரியவர்களிடம் இரத்த மாதிரிகளைப் பெற்றனர்.

அதேவேளை சாவற்காடு மற்றும் மானிப்பாய் பகுதியில் உள்ள 12 பேரிடம் பரிசோதனைக்கான இரத்த மாதிரிகள் இன்று பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க105)

## கிலி கொள்கிறது உலகம்

# நேற்றுமுன்தினம் 5,975 பேர் பலி!

வுகான், ஏப். 4

கொரோனா வைரஸால் உலக அளவில் நேற்றுமுன்தினம் மட்டும் 5,975 பேர் உயிரிழந்தனர். கொரோனா வைரஸ் இனங்காணப்பட்ட பின்னர் ஒரே நாளில் ஏற்பட்ட அதிகப்படியான உயிரிழப்பாக இது பதிவானது.



சீனாவின் வுகான் மாநகரில் தோற்றம் பெற்ற கொரோனா வைரஸ் தற்போது உலகமெங்கும் வியாபித்துள்ளது. சீனாவில் ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும் சீனாவுக்கு வெளியில் வைரஸின் தாக்கம் பல மடங்கு மிகைப்பட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளில் கொரோனா தாண்டவமாடி வருகின்றது. இந்த நாடுகளில்தான் அதிகப்படியான உயிரிழப்புக்கள் பதிவாகி வருகின்றன. இந்த நிலையில் ஒட்டுமொத்தமாக உலக அளவில் நேற்றுமுன்தினம் மட்டும் 5,975 பேர் உயிரிழந்தனர். அதேநேரம் நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 80 ஆயிரம் பேர் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

## துரித கதியில் பிரமாண்டமான மருத்துவமனை

### அமைக்கின்றது ரஷ்யா

மொஸ்கோ, ஏப். 4

ரஷ்யாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில், அங்கு துரித கதியில் மிகப்பெரும் மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகின்றது.

கொரோனாவால் ரஷ்யா ஆரம்பத்தில் பாதிக்கப்படாவிட்டாலும் கடந்த சில நாள்களாக அங்கு கொரோனா விஷ்வரூபம் எடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. ரஷ்யாவில் சுமார் 4 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 35 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் உச்சக்கட்டமாக 771 பேர் ஒரே நாளில் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். இதையடுத்தே சீனாவைப் போன்று துரித கதியில் மிகப்பெரும் கொரோனா மருத்துவமனையை அமைக்கின்றது ரஷ்யா. (ம)



## முன்னும் பின்னும்





**கொரோனா காரணமாக உலக அளவில் பல்வேறு நாடுகளும் பல்வேறு விதமாக ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன. ஜப்பானிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தலைநகர் டோக்கியோவில் உள்ள பகுதியொன்றில் ஊரடங்குக்கு முன்னதாக நிலையையும் ஊரடங்குக்குப் பின்னதான நிலையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன இந்த ஒளிப்படங்கள். (ம)**



## பிரான்ஸ்க்கு பேராபத்து!

பாரிஸ், ஏப். 4

கொரோனாவால் இத்தாலி, அமெரிக்கா ஆகியவற்றைவிட அதிக உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது பிரான்ஸ்.

சீனாவில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தற்போது ஐரோப்பிய நாடுகளைக் கதிகலங்க வைத்து வருகின்றது. ஒவ்வொரு நாளும் குறைந்தது 4 ஆயிரத்துக்கும் அதிகமான அளவுக்கு உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் 5,975 உயிரிழப்புக்கள் உலக அளவில் பதிவாகியுள்ளன. பிரான்ஸில் மட்டும் 1,355 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் இனங்காணப்பட்ட பின்னர் ஒரே நாளில் ஒரு நாட்டில் அதிக உயிரிழப்புக்கள் பதிவாகியமை இதுவே முதல் தடவையாகும். இதனால் பிரான்ஸ் முழுவதும் தற்போது பேரச்சம் குடிகொண்டுள்ளது. (ம)



## ஊரடங்கை மீறினால் சுட்டுக் கொல்லவும்!

### டுடேர்தே அதிரடி

மணிலா, ஏப். 4

பிலிப்பைன்ஸில் ஊரடங்கை எவராவது மீறினால் அவர்களைச் சுட்டுக் கொல்லும்படி அந்த நாட்டு அதிபர் டுடேர்தே உத்தரவிட்டுள்ளார்.

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சமூக விலகலைக் கடைப்பிடிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதற்காக பல்வேறு நாடுகள் ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தி உள்ளன. மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் நோயின் தீவிரத்தை உணராமல் வெளியில் சுற்றுவதை பார்க்க முடிகிறது. இந்த நிலையில், பிலிப்பைன்ஸ் நாட்டில் ஊரடங்கு உத்தரவை மீறும் நபர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என அதிபர் டுடேர்தே எச்சரித்துள் ளார்.

'ஊரடங்கு உத்தரவுக்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம். ஊரடங்கு உத்தரவை மீறி, சுகாதார பணியாளர்கள், மருத்துவர்களுக்கு இடையூறு செய்வது மிகப்பெரிய குற்றம் ஆகும். ஊரடங்கை மீறுவோர்களால் அரசின் நடவடிக்கைகளுக்குச் சிக்கல் ஏற்பட்டால் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவர்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

உலகக்கிண்ணம் வெல்ல

## டோனியின் சிக்சர் காரணம் இல்லை!

### கம்பீர் சீண்டல்

புதுடெல்லி, ஏப். 4

இந்திய அணி உலகக்கிண்ணம் வெல்வதற்கு டோனியின் சிக்சர் மட்டும் காரணமல்ல. அணியின் ஒட்டுமொத்த முயற்சியும்தான் காரணம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர்.

2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இந்தியாவின் வான்கடே மைதானத்தில் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கையை வீழ்த்தி கிண்ணம் வென்றது இந்தியா. டோனி இறுதியாக சிக்சர் விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார். அந்த உலகக் கிண்ணத் தொடரிலேயே டோனியின் சிக்சர்தான் அதிகம் பேசப்பட்டது. உலகக் கிண்ணம் வென்ற 9ஆவது ஆண்டை இந்திய ரசிகர்கள் நேற்றுமுன்தினம் கொண்டாடினர். இந்த நிலையிலேயே கம்பீர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு சிறிய நினைவூட்டல். 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை ஒட்டுமொத்த இந்தியாவும், இந்திய அணியும், பயிற்சியாளர்களும் ஒருங்கிணைந்த முயற்சியால் வென்றார்கள். சிக்சர் மீதான உங்களின் அதீத விருப்பத்தை கைவிட வேண்டும் என்று கம்பீர் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)



# ஒலிம்பிக் நீச்சல் நாயகி கபாஸுக்குக் கொரோனா




புடாபெஸ்ட், ஏப். 4

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற ஹங்கேரி நீச்சல் வீராங்கனை போக்லர்கா கபாஸ் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸால் உலகமே முடங்கிப் போயுள்ளது. அரசியல் பிரமுகர்கள், விளையாட்டுப் பிரபலங்கள் எனப் பலரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 2016ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரில் ஹங்கேரியின் நீச்சல் வீராங்களை கபாஸ் 800 மீற்றர் போட்டியில் வெண்கலம் வென்றார். மிகக் குறைந்த வயதில் அவர் வெண்கலப் பதக்கம் வென்றதால் உலகெங்கிலும் இருந்து பாராட்டுக்களைப் பெற்றார். இந்த நிலையில் அவருக்குக் கொரோனா தொற்று இருப்பது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. கபாஸ் மட்டுமல்லாமல் மேலும் 8 வீராங்கனைகள் ஹங்கேரியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

# லூயிஸ் காலமானார்

லண்டன், ஏப். 4

கணிதவியலாளர் டக்வொர்த் என்பவருடன் இணைந்து கிரிக்கெட்டில் இன்று பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பிரபல டக்வொர்த் லூயிஸ் கணக்கீட்டு முறையை உருவாக்கிய டோனி லூயிஸ் காலமானார். அவருக்கு வயது 78.

சர்ச்சைக்குரிய முறையாக இருந்தாலும் கிரிக்கெட்டில் இதற்கு இணையான ஒரு கணக்கீட்டு முறை இல்லை என்பதே பலவல்லுநர்களின் கருத்தாக இருந்து வருகிறது. இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் இவரது மறைவுக்கு இரங்கல் வெளியிட்டுள்ளது. (ம)



## ஊதியத்தில் பிடித்தமில்லை

### இந்திய கிரிக்கெட் சபை தெரிவிப்பு

புதுடெல்லி, ஏப். 4

கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக இந்திய கிரிக்கெட் வீரர்களின் ஊதியத்தில் இருந்து ஒரு தொகை பிடித்தம் செய்யப்படுகின்றது என்ற தகவலில் எவ்வித உண்மையும் இல்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு விரும்பியவர்கள் நிதி வழங்கலாம் என்று இந்தியப் பிரதமர் மோடி அறிவித்திருந்தார். இதனால் பலரும் பல்வேறு நிவாரணங்களை வழங்கி வருகின்றனர். தற்போது கிரிக்கெட் ஆட்டங்கள் இடம்பெறாததால் வீரர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்வதற்கு இந்தியக் கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகின்றது என்றும் அந்தத் தொகை கொரோனாவுக்கு எதிரான பிரதமரின் நிதி திரட்டலுக்கு வழங்கப்படும் என்றும் தகவல் வந்திருந்தது. ஆனால் இந்தத் தகவலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மறுத்துள்ளது. (ம)




# அமெரிக்கப் பகிரங்கம் திட்டமிட்டபடி நடக்கும் அந்தநாட்டு ரென்னிஸ் சம்மேளனம் தெரிவிப்பு

வொஷிங்டன், ஏப். 4

அமெரிக்கப் பகிரங்க பூப்பந்தாட்டத் தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அமெரிக்கன் ரென்னிஸ் சம்மேளனம் அறிவித்தது.

கொரோனாவால் உலக அளவில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் அமெரிக்காவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 7 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவிலேயே நியூயோர்க் நகரத்தில்தான் கொரோனாவின் தாக்கம் அதிஉச்சமாக உள்ளது. அமெரிக்கப் பகிரங்கத் தொடரும் நியூயோர்க் நகரில்தான் நடைபெறுவது வழமை. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை வழங்க நியூயோர்க் ரென்னிஸ் மைதானங்கள் கொரோனா மருத்துவமனைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனால் அமெரிக்கப் பகிரங்கத் தொடர் பிற்போடப்படத்தான் அதிக வாய்ப்பு என்று கருதப்படும் நிலையில், தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அறிவித்துள்ளது அமெரிக்க ரென்னிஸ் சம்மேளனம். 'கொரோனாவின் தாக்கத்தையும் அதனால் ஏற்பட்டுவரும் பின்னடைவையும் நன்கு அவதானித்து வருகின்றோம். எனினும் தொடரை நடத்துவது என்ற முடிவில்தான் நாம் உள்ளோம்' என்று அமெரிக்க ரென்னிஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது. (ம)



செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2020 இல் வெளியிடப்பெற்றது.